பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 31 சனிக்கிழமை 14.06.2025 கதிர் 217

## இது ரகசியம் அல்ல!

கிழக்கு மாகாணம், மண்முனை தென் எருவில்பற்று பிரதேசசபையில் தனது கட்சி உறுப்பினரும் தனது உறவினருமான நபர் தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவாக ☞ 2

# மத்திய கிழக்குப் போர்ப் பதற்றத்தினால் இலங்கை பொருளாதாரத்திற்குப் பாதிப்பு

## பொருளியலாளர்கள் எச்சரிக்கை

மத்தியகிழக்கில்தீவிரமடைந்துவரும் பதற்றங்களால் ஏற்கனவே மிகுந்த நெருக்கடியிலிருந்து மீட்சிடைந்துவரும் இலங்கையின்பொருளாதாரம்வெகுவாகப் பாதிக்கப்படக்கூடும்எனபொருளியலாளர் தலால் ரஃபி எச்சரித்துள்ளார்.

இஸ்ரேல் - ஈரானுக்கு இடையில் அதிகரித்துவரும்பதற்றநிலையைஅடுத்து தனது சமூகவலைத் தளப்பக்கத்தில் அறிக்கையொன்றைவெளியிட்டிருக்கும் அவர், 'ஈரான் மீதான இஸ்ரேலின் இராணுவத் தாக்குதலை அடுத்து உலக சந்தையில் எண்ணெயின் விலை சுமார் 12 சதவீதத்துக்கும் மேல் சடுதியாக உயர்வடைந்துள்ளது. இதுவெளியக அழுத்தங்களால்நலிவடைந்தநிலையில் இருக்கும் இலங்கையின் பொருளாதாரத் தின்மிகமோசமானபாதிப்பைஏற்படுத்தும்' எனக் கவலை வெளியிட்டுள்ளார்.

அத்தோடு இலங்கை எரிபொருள் இறக்குமதிக்காக வருடாந்தம் சுமார் 4.5 பில்லியன் டொலர்களைச் செலவிடுவதாகவும், தற்போது எண்ணெய் விலையில்ஏற்பட்டிருக்கும்12 சதவீத உயர்வினால் வருடாந்த இறக்குமதிச்செலவு மேலும் 500 மில்லியன்டொலர்களால்அதிகரிக்கும்எனவும்அவர்சுட்டிக் காட்டியுள்ளார். அதுமாத்திரமன்றி மத்திய கிழக்கில் நிலவும் பதற்றநிலை மேலும் தீவிரமடையும் பட்சத்தில் எரிபொருள் விலை பெருமளவால் அதிகரிக்கும் எனவும், அதன் விளைவாக நாட்டின் வெளிநாட்டுக்கையிருப்பு வீழ்ச்சியடைவதுடன் ரூபாவின் பெறுமதி மீதான அழுத்தங்கள் வலுவடையும்எனவும்தலால்ரஃபிதெரிவித்துள்ளார்.

### எதிர்க் கட்சிகளுடன்

## கொள்கை அடிப்படையில் சேரவில்லை மக்கள் ஆணையினால் சேர்ந்துள்ளோம்

### பொது ஜன பெரமுர விளக்கம்

கட்சியின்அடிப்படைகொள்கைகளுக்குமுரணாக பிரதான எதிர்க்கட்சிகளுடன் பொது கொள்கையின் அடிப்படையில்ஒன்றிணையவில்லை.உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகளில் மக்கள் ☞ 6

## மின் கட்டண உயர்வு விடயத்தில் நாணய நிதியம் தீவிர கரிசனை

மின்கட்டண உயர்வு உள்ளிட்ட முக்கிய நடவடிக்கைகள்தொடர்பில்உன்னிப்பாகஅவதானம் செலுத்தியிருப்பதாகத் தெரிவித்துள்ள ☞ 6

# உரிமை மற்றும் நீதியை உறுதிப்படுத்தும் கடப்பாடே சிறுபான்மயினரின் எதிர்பார்ப்பு

## உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளை முன்வைத்து ஒக்ஸ்போர்ட் ப்ரூக்ஸ் பல்கலைக்கழகம் ஆய்வறிக்கை

வெறுமனே சமத்துவம் தொடர்பான வாக்குறுதிகளை விடுத்து உரிமைகள், நீதி மற்றும் சகலரும் உள்வாங்கப்படல் என்பவற்றைஉறுதிப்படுத்தப்பக்கூடியவாறான நம்பத்தகுந்தகடப்பாட்டையேசிறுபான்மையின மக்கள் எதிர்பார்க்கிறார்கள் என்பதையே உள்ளூராட்சிமன்றத் தேர்தல் முடிவுகள் காண்பிக்கின்ற என ஒக்ஸ்போர்ட் ப்ரூக்ஸ் பல்கலைக்கழகம் மற்றும் சிறுபான்மையின உரிமைகள் நிலையம் இணைந்து வெளியிடப்பட்டுள்ள ஆய்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருப்பதுடன்சிறுபான்மையின அரசியல்பிரதிநிதித்துவம்பிளவடைந்திருப்பதும், கட்சிகள் துண்டாடப்பட்டிருப்பதும் சிறுபான்மையின உரிமைகள் மற்றும் நீதி சார்ந்த விடயங்கள் பேசப்படுவதை மேலும் சிக்கலாக்கியிருப்பதாகத் தெரிவித்துள்ளது.

அண்மையில்வெளியானஉள்ளூராட்சிமன்றத் தேர்தல் முடிவுகளை அடுத்து ஒக்ஸ்போர்ட் ப்ரூக்ஸ்பல்கலைக்கழகத்தின்அபிவிருத்தி ☞ 2

# மின்சார சபைத் திருத்தச் சட்டமூலம் ரணில் கொண்டுவந்த சட்டமூல பிரதி

## தனியாருக்கு விற்பதே ஆளும்தரப்பின் திட்டம் முன்னிலை சோசலிசக் கட்சி குற்றச்சாட்டு

ஆளும்தரப்பு சமர்ப்பித்திருக்கும் மின்சார சபை திருத்த சட்டமூலம் ரணில்விக்ரமசிங்கவின்ஆளும்தரப்பு கொண்டுவந்திருந்த சட்ட மூலத்தின் பிரதியாகும். மின்சாரசபையை தனியாருக்கு விற்பனை செய்வதே ஆளும்தரப்பின் திட்டமாகும் என முன்னிலை சோசலிச கட்சியின் அரசியல் சபை உறுப்பினர் துமிந்த நாகமுவ தெரிவித்தார்.

உத்தேச மின்சாரசபை சட்டமூலத்தில்திருத்தம்மேற்கொள்ள ஆளும்தரப்பு எடுத்துவரும் நடவடிக்கை தொடர்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞ 2

## ஜனாவிற்கு எதிராக நடவடிக்கை

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோவின் செயலாளர் நாயகம் கோவிந்தன் கருணாகரத்துக்கு (ஜனா) எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அக்கூட்டணி அறிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தெற்கு எருவில் பற்று பிரதேச சபைக்கான தவிசாளர் தெரிவின்போது தேசிய மக்கள் சக்தி மற்றும் ☞ 2

## நாணய நிதிய நிபந்தனைகள் சிலதை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடுண்டு

### பதில் நிதி அமைச்சர் விளக்கம்

சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக் கொண்ட சட்ட ரீதியிலான இணக்கப்பாட்டினால் ஒருசில நிபந்தனைகளை கடுமையாக நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு காணப்படுகிறது. செலவுகளுக்கு அமைவாகவே சேவைகளின் கட்டணங்கள் தீர்மானிக்கப் படவேண்டும்என்பதைநாணயநிதியம் அழுத்தமாகவலியுறுத்தியுள்ளது என பதில் நிதி மற்றும் பொருளாதார திட்டமிடல் அமைச்சர் ஹர்ஷன சூரியபெரும தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ☞ 6

## தொடருந்து சேவை நிறுத்தங்களால் ஏற்படும் இழப்பை கணிக்க பணிப்பு

தொடருந்து சேவைகள் நிறுத்தப்படுவதன்காரணமாக நாளாந்தம் ஏற்படுகின்ற இழப்புக்கள்குறித்துகணக்காய்வொன்றைமேற்கொள்ளுமாறு அரசகணக்குகள்பற்றியகுழு அறிவுறுத்தல் வழங்கியது.

தொடருந்துத் திணைக்களம்தொடர்பான 2023ஆம் ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் அதன் செயலாற்றுகை குறித்து ஆராயும் நோக்கில் அரச கணக்குகள் பற்றிய குழு அதன்தலைவர்நாடாளுமன்ற உறுப்பினர் அரவிந்த செனரத் தலைமையில் கடந்த வாரம் கூடியபோதே இந்த அறிவுறுத்தல்வழங்கப்பட்டது.

கடந்த மே 8 இலங்கை தொடருந்துத் திணைக்களம் கோபா குழு முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்த ☞ 6

## மின்சார சபையின் மோசடிகள் மக்கள் மீது சுமத்தப்படுகிறது

### உதய கம்மன்பில குற்றச்சாட்டு

மின்சார சபையின் மோசடி மற்றும் முறைகேடுகள் நாட்டு மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது. மின்சார சபையின் உண்மையானநிதிநிலைமைவிபரங்களை எதிர்வரும் வாரம் ஆவணங்களுடன் வெளிப்படுத்துவேன் என்று பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கட்சியின் அலுவலகத்தில் நேற்று சிவில் அமைப்புக்கள் மற்றும் இடதுசாரி ☞ 6

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

வாக்களித்தார் என்று சாணக்கியன் தெரிவித்த குற்றச்சாட்டை ரெலோ கட்சியின் பொதுச் செயலாளர் ஜனா எனப்படும் கருணாகரன் நேற்று மறுத்திருந்தார். தமிழ் அரசுக் கட்சியே அந்தச் சபையில் இரகசிய வாக்கெடுப்பைக் கோரியது என்றும் பிள்ளையானின் கிழக்கு கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவர் அவர்களுக்கு ஆதரவளித்ததன் அடிப்படையில் இரகசிய வாக்கெடுப்பு சாத்தியமானது என்றும் பகிரங்க வாக்கெடுப்பு நடத்தியிருந்தால் உண்மை தெரிந்திருக்கும் என்றும் அப்படியிருக்கும்போது தமது கட்சி உறுப்பினர் மீதும் தன் மீதும் சாணக்கியன் எப்படிக் குற்றஞ்சாட்டலாம் என்றும் அவர் கேட்டிருந்தார்.

இருந்தாலும் அவர் மீது ஒ--முக்காற்று நடவடிக்கை எடுப்பதாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி அறிவித்துள்ளது. தமது கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளரான அவர், தமது உறுப்பினருக்கு தெளிவான அறிவுறுத்தல்களை வழங்காதது குறித்து அவரிடம் விளக்கம் கேட்கப்படும் என்று கட்சி தெரிவித்துள்ளது. ஜனா தவறு செய்யவில்லை என்றால் கட்சி ஏன் அவரிடம் விளக்கம் கேட்கின்றது என்பதற்கும் அவர் விளக்கமளிக்கவேண்டும்.

தென் எருவில்பற்று பிரதேச சபையைப் பொறுத்தவரையில் தமிழ் அரசுக் கட்சிக்கு 8, என்பிபிக்கு 6, பிள்ளையானின் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிக்கு 2, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு 1, ஐக்கிய மக்கள் சக்திக்கு 1, இரு சுயேச்சை அணிகளுக்குத் தலா 1 என்ற அடிப்படையில் 20 ஆசனங்கள் பகிரப்பட்டுள்ளன. இதில் தவிசாளர் உபதவிசாளர் தெரிவின்போது தமிழ் அரசுக் கட்சிக்கு 10 உறுப்பினர்களும் என்பிபிக்கு 9 உறுப்பினர்களும் வாக்களித்திருந்தனர். பிள்ளையானின் கட்சி என்பிபிக்கு வாக்களித்திருக்கும் என்பதுடன் அந்த மற்றைய நபர் யார் என்கிற கேள்வியில்தான் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் உறுப்பினர் தலை உருளுகின்றது. ஐக்கிய மக்கள் சக்தியும் சுயேச்சைகளும் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிப்பதில்லை என்பதில் உறுதியாக இருந்த நிலையில் அந்த 9 ஆவது வாக்கு எங்கிருந்து வந்தது என்கிற கேள்வியில்தான் ஜனாவின் உறவினர் 'சீனு'க்குள் நுழைகிறார்.

என்னதான் கட்சி விசாரணை, விளக்கம் கேட்பு என்றெல்லாம் நாடகமாடினாலும் ஜனநாயகக் கூட்டணி ஜனா மேல் எந்த நடவடிக்கையும் எடுக்கப் போவதில்லை என்பது நிச்சயம். ரெலோவிற்குள்ளும் அப்படி ஜனாவிற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கான தற்றுணிபோ துணிச்சலோ எந்தத் தலைவருக்கும் கிடையாது. பாம்பின் கால் பாம்பறியும் என்பார்களே அதுபோல ஜனாவை கட்சியைவிட்டு கலைப்பது தமக்குத் தாமே சொந்தச் செலவில் சூனியம் வைப்பதற்கு ஒப்பானது என்பதும் அவர்களுக்குத் தெரியும். அதனால் கட்சிக்குள்ளோ கூட்டணிக்குள்ளோ எதுவும் நடக்காது. அதேநேரம், வன்னி உட்பட பல சபைகளில் இன்னும் தெரிவுகள் நடக்க இருக்கையில் இந்தச் சம்பவத்தை வைத்து தமிழ் அரசுக் கட்சி மற்றைய சபைகளில் தமக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்துவிடக்கூடாது என்பதற்காகவே இப்போதைக்கு சமாளிப்பதற்காக ஜனாவிடம் விளக்கம் கேட்பதாக ஜனநாயகக் கூட்டணி நடிக்கின்றது. அதைத் தவிர வேறு எதுவும் நடக்காது.

............................

ஒரு பக்கத்தில் உள்ளூராட்சி சபைகளின் களேபரம் நகர்ந்துகொண்டிருக்கையில். தெற்கில் சிறைக் கைதிகள் விவகாரத்தில் அநுர ஆளும்தரப்பு என்ன செய்கிறது என்பது பற்றிய உண்மை வெளியே தெரியாமலேயே போகிறதோ என்று தோன்றுகின்றது.

அநுராதபுரம் சிறையில் இருந்து நிதிக் குற்றத்திற்காகத் தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளி ஒருவர் வெறும் 10 நாள் தண்டையில் வெளியே விடப்பட்டார் என்ற குற்றச்சாட்டினைத் தொடர்ந்து, இதில் தமது தவறுகள் எதுவும் இல்லை என்றும் அதிகாரிகளே தவறிழைத்தவர்கள், இதற்குள் ஊழல் மோசடி சம்பந்தப்பட்டிருக்கின்றது என்றும் அநுர ஆளும்தரப்பு மக்களுக்குக் காண்பிக்கப் பார்க்கின்றது. மக்களுக்கு மட்டுமல்ல நீதித்துறைக்கும் அப்படியேதான் காண்பிக்கப்பார்க்கின்றது. அதில் உண்மையும் இருக்கக்கூடும். மாற்றுக் கருதில்லை.

ஆனால், இதற்குள் பொதிந்திருக்கும் மற்றொரு நிர்வாக இடைஞ்சல், அல்லது உயர் நிர்வாக மட்ட அசண்டை பற்றி யாரும் கவனத்தில் எடுத்ததாகத் தெரியவில்லை. ஜனாதிபதியின் பொது மன்னிப்பு என்பது பொதுவாக, பெரும் குற்றங்கள் என்று கருதப்படும் கொலை, பாலியல் வன்புணர்வு, போதைப் பொருள் குற்றங்கள் சார்ந்த குற்றவாளிகளைத் தவிர்த்து அனைத்துக் கைதிகளுக்கும் பொருந்தும் வகையில்தான் வழங்கப்படுவது வழமை. ஜனாதிபதி செயலகத்தில் இருந்து வழங்கப்படும் உத்தரவு அந்த வகையில்தான் விடுக்கப்படும். அதாவது பெரும் குற்றங்களில் தண்டனை பெற்றவர்கள் தவிர்த்து ஏனைய கைதிகளுக்கு வெசாக் அல்லது பொசன் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி 6 மாத காலப் பொது மன்னிப்பு வழங்குகின்றார் என்று அதில் தெரிவிக்கப்பட்டிருக்கும்.

அதனடிப்படையில் பொருத்தமான கைதிகள் அனைவரின் தண்டனைக் காலமும் 6 மாதங்களால் குறைக்கப்படும். உதாரணமாக ஒருவருக்கு 7 ஆண்டுகள் தண்டனைக் காலம் என்றால், இந்த ஜனாதிபதியின் பொது மன்னிப்பு மூலம் அவரது தண்டனைக் காலம் ஆறரை ஆண்டுகளாகக் குறைக்கப்படும். அதுபோன்றே சிறு குற்றம் ஒன்றுக்காக 9 மாத காலத் தண்டன பெற்ற ஒருவர் இருந்தால் அவரது தண்டனைக் காலத்தில் 6 மாதங்கள் குறைக்கப்பட்டு 3 மாதங்கள் மட்டுமே அவர் தண்டனை அனுபவித்தால் போதுமானது.

இலங்கையில் சிறைகளில் கைதிகளின் எண்ணிக்கையில் அளவுக்கதிகமாக இருக்கின்றனர். அதாவது சிறைகள் கைதிகளால் நிரம்பி வழிகின்றன. சிறு குற்றங்களில் தண்டப் பணம் செல்லுத்த முடியாதவர்களும்கூட சிறைத் தண்டனை அனுபவித்து வருவதும் அதற்கொரு காரணம். இந்தநிலையில் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு இத்தகைய குற்றவாளிகளை விடுவித்து சிறைகளில் கைதிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கான வழி வகையாக நீண்ட காலமாகவே பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

அந்த அடிப்படையில் 6 மாத காலத் தண்டனை பெற்று வந்த ஒருவர் வெசாக் அல்லது பொசன் காலத்திற்குள் தண்டனை பெற்றிருந்தால் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பிற்கு உள்ளாகி உடனடியாக விடுவிக்கப்படுவது சாத்தியமான ஒன்றாகவே இருந்து வந்திருக்கின்றது. இது சரியான நடைமுறையா என்பது கேள்விக்குள்ளாக்கப்பட வேண்டியது என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால், சிறைத் துறை அதிகாரிகளுக்கு மேலிடங்களில் இருந்து தெளிவான அறிவுறுத்தல்கள், சுற்றறிக்கைகள் இன்றி அவர்களைச் செயற்பட விட்டுவிட்டு பின்னர் அவர்கள் மீது குறை கண்டுபிடித்து அவர்களே குற்றவாளிகள் என்பது போன்று சித்தரிப்பது சரிதானா என்பதுதான் இங்கு கேள்வியே.

அதுமட்டுமல்ல, ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் பொசன் தினத்தன்று விடுவிக்கப்படக்கூடிய கைதிகளின் விவரங்கள் மட்டுமே ஜனாதிபதி செயலகத்திற்கோ, ஏனைய உயர் இடங்களுக்கோ பட்டியலிடப்பட்டு அனுப்பப்படும். அது தவிர, பொசன் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி வழங்கிய பொது மன்னிப்புக் காலம் ஒவ்வொரு கைதிக்கும் அவர் தண்டனை பெற்ற நாளில் இருந்து கணக்கிடப்பட்டு, எப்போது அவருக்கு விடுதலை கிடைக்கும் என்பது சிறை அதிகாரிகளால் தீர்மானிக்கப்படும். அதற்கமைய அவர்கள் வெவ்வேறான திகதிகளில் தொடர்ந்து விடுவிக்கப்படுவார்கள். அது தொடர்பாக வழக்கமான நீதிநடைமுறைகளுக்கு அமைவாக நீதிமன்றம் உள்ளிட்ட துறைசார் மட்டங்களுக்கு அது பற்றிய அறிக்கையிடல்களை சிறை அதிகாரிகள் செய்வார்கள்.

இதனாலேயே இப்போது, ஜனாதிபதி பொதுமன்னிப்பை முறைகேடாகப் பயன்படுத்தி 50 பேர் விடுவிக்கப்பட்டுள்ளார்கள், 70 பேர் விடுவிக்கப்பட்டுள்ளார்கள் என்று புதிதாகக் கண்டு பிடித்தது போன்று சிஐடியை மேற்கோள்காட்டிச் செய்திகள் எல்லாம் வெளிவருகின்றன.

நீண்ட காலமாக இத்தகைய நடைமுறையை அனுமதித்து வந்துவிட்டு, அந்த நடைமுறைக்கு அமைய 10 நாள்களில் ஒரு கைதி விடுவிக்கப்பட்டதற்குத் தமது தரப்பில் எந்தத் தவறும் இல்லாதது போன்று அநுர ஆட்சி அதிகாரிகளை மாட்டிவிட்டு ஆளும்தரப்பினர் தாம் தப்பிக்கொள்ள முயற்சிப்பது எந்த வகையில் நியாயம் என்பதுதான் சிறை அதிகாரிகளின் தற்போதைய கேள்வி. அதில் நியாயமும் இருப்பதாகவே படுகிறது. கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சிறை அதிகாரிகள் தூயவர்கள், தவறு ஏதும் செய்யாதவர்கள் என்று வாதாடுவது எனது நோக்கமல்ல. ஆனால் அரச நடைமுறையில் காணப்படும் தவறை நீண்ட காலமாக அனுமதித்துவிட்டு திடீரென ஒரு நாள் அது தொடர்பில் கேள்வி எழுந்ததும் அதிகாரிகளைக் குற்றஞ்சாட்டுவது எந்த வகையில் நியாயம் என்பதே எழும் கேள்வி.

நீதிமன்றத்தில் சிறை அதிகாரிகள் இந்த விடயங்களைத் தெளிவுபடுத்தும்போது அநுர ஆட்சியின் நாடகங்கள், பொட்டுக்கேடுகள் அம்பலப்பட்டுப் போகும் என்பதே எனது கணிப்பு. விரைவில் அதற்கான சாத்தியங்கள் உண்டு.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## உரிமை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் அவசர நடவடிக்கை நிலையமும், சிறுபான்மையின உரிமைகள் குழுவும் இணைந்து 'பிளவு மற்றும் வலுவிழப்பு: இலங்கையில் சிறுபான்மை அரசியலின் சீர்குலைவு' எனும் தலைப்பில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் முடிவுகளின் பிரகாரம் வட, கிழக்கு மாகாணங்களில் தேசிய மக்கள் சக்தி பின்தள்ளப்பட்டிருப்பதானது, சமத்துவத்தை முன்னிறுத்தி பரப்புரைகளை மேற்கொண்ட போதிலும், அவர்கள் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களின் முக்கிய கரிசனைக்குரிய விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தவில்லை என்பதையே காண்பிக்கின்றது. எனவே தற்போது சிறுபான்மையினரின் உரிமைகள் நீதியானதும், சமத்துவமானதுமான முறையில் உறுதிப்படுத்தப்படவேண்டும். அன்றேல் மீண்டும் இனரீதியான மனக்குறைகள் புத்துருவாக்கம் பெறக்கூடிய அச்சுறுத்தல் காணப்படுகின்றது.

இலங்கையில் கடந்த பல தசாப்தகாலமாக துடிப்புடனும், வெற்றிகரமாகவும் இயங்கிய சிறுபான்மை அரசியலானது பல வருடகாலமாகக் கட்டமைப்பு ரீதியாக வலுப்பெற்ற பேரினவாத தேசியவாதம், சிறுபான்மையினக் கட்சிகள் மத்தியில் செயற்திறன்மிக்க தலைமைத்துவமின்மை, அரசமைப்பு மறுசீரமைப்பு அல்லது அதிகாரப்பகிர்வு தொடர்பில் தெளிவான முன்மொழிவுகளை முன்வைப்பதில் தேசிய கட்சிகளின் தோல்வி போன்ற காரணங்களால் முழுமையாக சீர்குலைந்துபோயுள்ளது.

இனமோதலின் விளைவாக நாடு முகங்கொடுக்கநேர்ந்த துன்பங்களுக்குத் தீர்வை வழங்குவதில் தேசிய கட்சிகள் அடைந்த தோல்வி சிறுபான்மையின தேர்தல் பிரதிநிதித்துவத்தை தளர்வடையச்செய்வதில் பெரும்பங்காற்றியுள்ளது. இனரீதியான சிறுபான்மையினக்கட்சிகள் அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் சமூகங்களின் நலனை முன்னிறுத்தி செயற்படுவதைத் தடுக்கும் வகையில் அவர்களுக்கிடையே பிளவுகளை உண்டாக்குதல் உள்ளிட்ட பல்வேறு உத்திகள் சிங்கள பௌத்த தேசியவாத சக்திகளால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. சிறுபான்மையின அரசியல் பிரதிநிதித்துவம் பிளவடைந்திருப்பதும், கட்சிகள் துண்டாடப்பட்டிருப்பதும் சிறுபான்மையின உரிமைகள் மற்றும் நீதி சார்ந்த விடயங்கள் பேசப்படுவதை மேலும் சிக்கலாக்கியுள்ளன.

அதேபோன்று வெறுமனே சமத்துவம் தொடர்பான வாக்குறுதிகளை விடுத்து உரிமைகள், நீதி மற்றும் சகலரும் உள்வாங்கப்படல் என்பவற்றை உறுதிப்படுத்தப்பக்கூடியவாறான நம்பத்தகுந்த கடப்பாட்டையே சிறுபான்மையின மக்கள் எதிர்பார்க்கிறார்கள் என்பதையே உள்ளூராட்சிமன்றத்தேர்தல் முடிவுகள் காண்பிக்கின்றன. இதுகுறித்து சிறுபான்மையின மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தேசிய கட்சிகள் அவதானம் செலுத்துவதுடன் அக்குறைபாடுகளை நிவர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவ்வறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## மின்சார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை மின்சாரசபை சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதுதொடர்பான சட்டமூலத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் திருத்தங்களை பார்க்கும்போது, கடந்த ஆளும்தரப்பில் ரணில் விக்ரமசிங்க, காஞ்சனவிஜேசேகர ஆகியோரும் மின்சாரசபை சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள சட்டமூலம் ஒன்றை கொண்டுவந்திருந்தது. அதில் மின்சாரசபையின் நிறுவனங்களை 14 துண்டுகளாக பிரித்து, எதனை விற்பனை செய்வது, எதனை பகுதியளவு விற்பனை செய்வது என நடவடிக்கை எடுத்திருந்தது.

தற்போது இந்த ஆளும்தரப்பும் மின்சார சபை சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள சட்டமூலம் தயாரித்து சமர்ப்பித்திருக்கிறது. அந்த சட்டமூலத்தில் மின்சாரசபை நிறுவனங்களை 6 துண்டுகளாக பிரித்திருக்கிறது. இரண்டு வருடங்களுக்கு பிறகே அந்த நிறுவனங்களை எத்தனை துண்டுகளாக பிரிப்பது என தீர்மானிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேநேரம் துண்டுகளாக பிரிக்கப்படும் பகுதிகள் நிறுவனங்களாக மாற்றப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது நிறுவனங்களாக மாற்றப்பட்டால், அதனை விற்பனை செய்வது என்பது உறுதியாகும். அதனை யாராலும் தடுக்க முடியாது. கூட்டாக செயற்படும் நிறுவனத்தை துண்டுகளாக பிரிப்பதற்கே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மின்சாரசபை நிறுவனத்தை பணம்கொடுத்து வாங்க இலங்கையில் தனியார் நிறுவனம் இல்லை. அந்தளவு விசாலமானதாகும். அதனால் இந்த நிறுவனத்தை துண்டுகளாக பிரித்து விற்பனை செய்வதற்கே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மின்சார சபை கடந்த வருடம் 147 பில்லியன் லாபம் ஈட்டியுள்ளதாக தெரிவித்திருந்தது. இது இந்த நிறுவனத்தின் மூலம் எந்தளவு லாம் பெற்றுக்கொள்ளலாம் என நிறுவனங்களுக்குக் காட்டுவதற்கே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அதனால் மின்சாரசபையை தனியார் மயமாக்குவதற்கு ஆளும்தரப்பு எடுத்துவரும் நடவடிக்கையை தோற்கடிப்பதற்கு ஒன்றிணையுமாறு தொழிற்சங்கங்களிடம் கோரிக்கைவிடுத்திருக்கிறோம். இதுதொடர்பாக அனைத்து தொழிற்சங்கங்களுடம் நாங்கள் முன்னெடுத்திருந்த கலந்துரையாடல் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆளும்தரப்பின் இந்த மின்சாரசபை சட்டமூலத்துக்கு எதிராக நாங்கள் உட்ப பல தரப்பினர் உயர் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்திருந்தோம். அது தொடர்பான விசாரணைகள் தற்போது நிறைவடைந்திருக்கின்றன. நீதிமன்றத்தின் தீர்ப்பு விரைவாக சபாநாயகருக்கு அனுப்பிவைக்கப்படும் என நினைக்கிறோம் என்றார்.

## ஜனாவிற்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி என்பன இணைந்1து களமிறக்கிய வேட்பாளருக்கு ஆதரவாக வாக்களிப்பதற்கு மாவட்டக் கிளைத் தலைவர் என்ற அடிப்படையில் உறுப்பினர்களுக்கு வழிகாட்டலை வழங்கியமை தொடர்பிலேயே அவருக்கு எதிராக மேற்குறிப்பிட்டவாறு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அண்மையில் நடைபெற்றுமுடிந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தெற்கு எருவில் பற்று பிரதேச சபையில் இலங்கைத் தமிழரசுக்கட்சி 11,981 வாக்குகளைப்பெற்று 8 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி 3,894 வாக்குகளைப்பெற்று 6 ஆசனங்களையும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி 3,894 வாக்குகளைப்பெற்று 2 ஆசனங்களையும், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, ஐக்கிய மக்கள் சக்தி, சுயேச்சைக்குழு 1 மற்றும் சுயேச்சைக்குழு 2 என்பன முறையே 1967, 1286, 809, 1174 வாக்குகளைப்பெற்று தலா ஒரு ஆசனத்தையும் கைப்பற்றின.

இந்நிலையில் அப்பிரதேச சபைக்கான தவிசாளர் மற்றும் உப தவிசாளரைத் தெரிவுசெய்வதற்கான வாக்கெடுப்பு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடத்தப்பட்டது.

இதன்போது 6 ஆசனங்களைக்கொண்ட தேசிய மக்கள் சக்தி மற்றும் 2 ஆசனங்களைக்கொண்ட தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி என்பன இணைந்து களமிறக்கிய தவிசாளர் வேட்பாளருக்கு ஆதரவாக ஒரு ஆசனத்தைப்பெற்ற

தொடர்ச்சி 6ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# பலஸ்தீன இனவழிப்பை நிறுத்துவதற்கு வலியுறுத்திக் கொழும்பில் போராட்டம்

## அமெரிக்கத் தூதரகம் முன்பாக




அமெரிக்க உதவியுடன் இஸ்ரேலினால் பலஸ்தீனத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் இனவழிப்பு முடிவுக்குக்கொண்டுவரவேண்டும் என கொழும்பிலுள்ள அமெரிக்கத்தூதரகத்துக்கு முன்பாக ஒன்றுகூடி வலியுறுத்தியுள்ள செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள், இஸ்ரேலிய ஆளும்தரப்புடன் இலங்கை பேணிவரும் சகல தொடர்புகளையும் துண்டிக்கவேண்டும்எனவும் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

‘காஸாவில் இடம்பெற்றுவரும் இனவழிப்புக்கு எதிராக ஒன்றிணைவோம்‘ எனும் மகுடத்தில் மாற்றத்துக்கான இளைஞர்கள் அமைப்பினால் நேற்று வெள்ளிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு கொழும்பிலுள்ள அமெரிக்கத்தூதரகத்துக்கு முன்பாக எதிர்ப்புப்போராட்டமொன்று ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது.

இப்போராட்டத்துக்கு ஏற்கனவே அழைப்பு விடுக்கப்பட்டிருந்த நிலையில், அமெரிக்கத் தூதரகத்துக்கு முன்பாக முன்கூட்டியே பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

அவ்வாறிருந்தும் மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பலஸ்தீன ஆதரவாளர்கள் உள்ளிட்டோர் இணைந்து ‘அமெரிக்க, இஸ்ரேலிய இரத்தவெறிப்போரை எதிர்ப்போம். காஸாவில் நடக்கும் இனப்படுகொலைக்கு எதிராக ஒன்றிணைவோம்‘ என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகையை ஏந்தியவாறு எதிர்ப்புப்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதுமாத்திரமன்றி ‘உணவு என்பது போர் அல்ல‘, ‘பலஸ்தீனத்துடன் இலங்கை உடன்நிற்கின்றது‘, ‘பலஸ்தீனத்தில் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பை உடன் முடிவுக்குகொண்டுவரவேண்டும்‘, ‘இஸ்ரேலும் அமெரிக்காவும் இணைந்து இன்று எத்தனை சிறுவர்களைக் கொன்று அழித்தன?‘ எனும் வாசகங்களுடனான பதாகைகளையும் அவர்கள் ஏந்தியிருந்தனர்.

அத்தோடு சிலர் பலஸ்தீன கொடியையும், சடலம் போன்று சுற்றப்பட்ட பொம்மைகளையும் ஏந்தியிருந்ததுடன், அமெரிக்க அரசுத் தலைவர் டொனால்ட் ட்ரம்பின் உருவத்திலான முகமூடிகளையும் அணிந்திருந்தனர்.

அதேவேளை போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் சார்பில் கருத்து வெளியிட்ட சிவில் சமூக செயற்பாட்டாளரும், சட்டத்தரணியுமான சுவஸ்திகா அருலிங்கம், இஸ்ரேலினால் பலஸ்தீனத்தில் நிகழ்த்தப்பட்டுவரும் இனவழிப்புக்கு எதிர்ப்பை வெளிப்படுத்தி தாம் ஒன்றுகூடியிருப்பதாகவும், இஸ்ரேலிய அரசாங்கத்துடன் இலங்கை பேணிவரும் சகல தொடர்புகளையும் துண்டிக்குமாறு தாம் வலியுறுத்துவதாகவும் தெரிவித்தார்.



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தீப்பிழம்பாக மாறும் போர்ப்பதற்றம்

மத்திய கிழக்கு மீண்டும் ஒருமுறை உலக நாடுகளின்கவனத்தைவெகுவாகஈர்த்துள்ளது. ஈரானும் இஸ்ரேலும் இடையே தீவிரமாகத் திரண்டு வரும் பதற்ற நிலை, ஒரு பகுதிக்கானது மட்டும் அல்ல; அது உலக அரசியல் மற்றும் பொருளாதாரத்தையே பாதிக்கும் அளவுக்கு விரிந்துள்ளது.

முன்னர் பெயரிடப்படாத தாக்குதல்களாகவே இருந்த இஸ்ரேல்– ஈரான் மோதல்கள், தற்போது வெளிப்படையாகவும், சமரசமற்றவையாகவும் காணப்படுகின்றன. கடந்த வாரங்களில் ஈரானின் இராணுவ கட்டமைப்புகளுக்குத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், அதற்கு பதிலளிக்கத் தயாராக இருப்பதாகவும் ஈரான் கூறியிருப்பதும், இஸ்ரேலுக்கான ஆபத்து நீங்கும் வரையிலும் இஸ்ரேலை இலகுக்கு வைப்பவர்களை அழிப்போம் என்றும் இஸ்ரேல் தலைவர்கள் கூறிவருவதும் மோதலை ஒரு முற்றுமுழுதான போர்த் திசையில் இழுத்துச் செல்லக்கூடிய ஆபத்தை உருவாக்கியுள்ளது.

இதன் தாக்கங்கள் பல அடுக்குகளில் பரவக்கூடியவை. முதலாவதாக, போர் ஆரம்பித்தால், திரவ எரிபொருள் விலை சர்வதேச அளவில் உயரும் என்பது உறுதி. இது பொருளாதாரத்தில் அதிர்வுகளை ஏற்படுத்தும். இரண்டாவதாக, பசுமை புரட்சி, நவீன தொழில்நுட்பங்கள் போன்றவை பேசப்படும் இக்காலத்தில், போரில் மூழ்கும் ஒரு பிரதேசம் மனித வளத்தையும், வளங்களையும் வீணாக்கும்.

மூன்றாவதாக, இஸ்ரேல்–ஈரான் இடையிலான மோதல் ஒரு மதநம்பிக்கைக் கோணத்திலும் விளையாடப்படுகிறது. இது உலகம் முழுவதும் பல அமைதிப் பிரதேசங்களிலும் முரண்பாடுகளைத் தூண்டும் ஆபத்துள்ள செயல்.

இவ்வாறு, மிகச் சிக்கலான சூழ்நிலையில், இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையே ஒரு மூன்றாவது நாடு அல்லது அமைப்பு – ஐ.நா., அல்லது ஒட்டுமொத்த அரபு கூட்டமைப்புகள் – நலன் சார்ந்த மதிப்பீடுகளுடன் நடுவர் செய்ய வேண்டிய கட்டாயம் உள்ளது.

இருவழி உரையாடல், சமரசம், பரஸ்பர புரிதல் ஆகியவை தவிர, போர் என்ற யாருக்கும் முழுமையான வெற்றி தராத விளையாட்டில் நுழைவது, சுய அழிவைத் தவிர வேறு எதையும் தரமாட்டது.

இந்த செய்தி, இன்று மத்திய கிழக்குக்கே அல்ல முழு உலகத்துக்கும் எச்சரிக்கை.

# கெஹெலியவிற்கு எதிரான வழக்கு செப்டெம்பரில் விசாரணைக்கு

முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட இருவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை 2025 செப்டம்பர் 25 விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று தீர்மானித்தது. இதற்கான உத்தரவை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுஜீவ நிசங்க பிறப்பித்தார்.

இதன்போது வழக்கின் பிரதிவாதிகளாக முன்னாள் வெகுசன ஊடக அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல மற்றும் அரச அச்சக கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவர் ஆகியோர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல வெகுசன ஊடக அமைச்சராக செயற்பட்ட காலப்பகுதியில் அவரது தனிப்பட்ட தொலைபேசி கட்டணத்தை அரச அச்சகத் கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான 230,984.45 ரூபாவை பயன்படுத்தி அரசுத் தலைவர் செயலகத்தின் சுற்று நிருபத்துக்கு முரணாக செலுத்தியமை ஊடாக இலஞ்ச ஊழல் சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு இலஞ்சம் மற்றும் ஊழல்களை விசாரணை செய்யும் ஆணைக்குழுவினால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# 180 மருந்துகளுக்கு தட்டுப்பாடு

மத்திய மருந்து சேமிப்பு கட்டமைப்பில் சுமார் 180 அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. அத்தோடு மருத்துவமனைக் கட்டமைப்பிற்குள்ளும் சுமார் 50 வகையான அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வைத்தியர் சமில் விஜேசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மத்திய மருந்து சேமிப்பு கட்டமைப்பில் சுமார் 180 அத்தியாவசிய மருந்துகள் பற்றாக்குறையாகவுள்ளது. மேலும் மருத்துவமனை கட்டமைப்பிற்குள்ளும் சுமார் 50 வகையான அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. குறிப்பாக வலி நிவாரணிகள், நுண்ணுயிர் எதிர்ப்பிகள், இரத்த அழுத்தம், நீரிழிவு மற்றும் சிறுநீரகம் தொடர்பான நோய் நிலைமைகளுக்கான மருந்துகள் இந்த பற்றாக்குறை பட்டியலில் உள்ளடங்குகிறது.

புற்றுநோய் சிகிச்சை மருந்துகளின் பற்றாக்குறை அதிகரித்து வருவதையும் அவதானிக்க முடிகிறது. இது பல நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதற்கான அணுகலையும் கட்டுப்படுத்தியுள்ளது.

அத்தகைய மருந்துகளை தனிப்பட்ட முறையில் வாங்குவது பெரும்பாலும் கட்டுப்படியாகாது. இந்த நெருக்கடி பாதிக்கப்பட்டவர்களின் சுமையை மேலும் அதிகரிக்கிறது.

கடந்தகாலங்களில் ஏற்பட்ட மருந்து பற்றாக் குறையிலிருந்து பாடம் கற்றுக்கொள்ளத் தவறியமையினாலேயே இந்த பிரச்சினை தொடர்ந்தும் தீர்க்கப்படாமலுள்ளது. 2024 ஆம் ஆண்டு கொள்முதல் தாமதங்கள்தான் இதற்குக் காரணம் என்று சுகாதார அமைச்சர் ஒப்புக்கொண்டுள்ளார்.

எனவே இந்த பிரச்சினை தொடர்பில் சுகாதார அமைச்சரும் அரசுத் தலைவர்யும் பொறுப்பை ஏற்க வேண்டும் என வலியுறுத்துகின்றோம். இந்துப் பிரச்சினை ஏன் முன்னரே கண்டறியப்படவில்லை? தற்போதைய மருந்து பற்றாக்குறைகள் அவசரகால கொள்முதல் நடைமுறைகளை நம்பியிருப்பதற்கு வழிவகுக்கும். இது பொது நிதியை தவறாகப் பயன்படுத்துவது குறித்த கவலைகளை எழுப்புகிறது.

அந்த வகையில் இது அவசரகால கொள்முதல் நாடகத்திற்கு தெளிவாக வழிவகுக்கிறது. மருந்துகள் கிடைக்கவில்லை மற்றும் முற்பதிவுகள் தாமதமானால், விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் சுகாதார அமைச்சிற்கு அவசரகால கொள்முதல்களுக்குச் செல்ல வேண்டியிருக்கும் என்றார்.

# விளக்கமறியல் நீடிப்பு

தேசிய லொத்தர் சபையின் முன்னாள் நடவடிக்கைப் பணிப்பாளரும் முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் பொதுமக்கள் தொடர்பாடல் பணிப்பாளராகவும் கடமையாற்றிய துஷித்த ஹல்லொலுவவின் விளக்கமறியலில் காலம் ஜூன் 20 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபைக்கு சொந்தமான அரச சொத்துக்களை தவறாக பயன்படுத்தியமை தொடர்பில் கோட்டை நீதிவான் நீதிமன்றில் கோட்டை பொலிஸார் தாக்கல் செய்துள்ள வழக்கு நேற்று விசாரணைக்கு வந்த போதே கோட்டை நீதிவான் நிலுபுலி லங்காபுர இதற்கான உத்தரவை பிறப்பித்துள்ளார்.

2017 மற்றும் 2019 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் தேசிய லொத்தர் சபையின் நடவடிக்கை பணிப்பாளராக இருந்த துஷித்த ஹல்லொலுவ தேசிய லொத்தர் சபைக்கு சொந்தமான 478000 ரூபா பெறுமதியான எபல் ரக கையடக்கத் தொலைபேசி எபல் மெக் புக் ஆகியவற்றை சொந்த தேவைக்காக பயன்படுத்தியதன் ஊடாக தவறான பயடுத்தியமை தொடர்பில் கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய கோட்டை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அதன்படியே பொதுச் சொத்து துஷ்பிரயோக சட்டத்தின் கீழ் முன் வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு அமைய ஹல்லொலுவ விளக்கமரியலில் வைக்கப்ப்ட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உ ங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் சொத்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical
University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDr
JDR HEALTH CARE PVT[LTD]
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384

காலைக்கதிர் Kalaikkathir

## ஜனாவிற்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணியின் உறுப்பினர் வாக்களித்தார் என்று தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் குற்றஞ்சாட்டினார். எனினும் ஒரு வாக்கு வித்தியாசத்தில் தமிழ் அரசுக் கட்சி இந்தப் போட்டியில் வெற்றி பெற்றது.

இந்நிலையில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்டக்கிளைத் தலைவர் என்ற ரீதியில் யாருக்கு வாக்களிக்கவேண்டும் என்ற வழிகாட்டலை வழங்கினார் எனும் அடிப்படையிலேயே கோவிந்தன் கருணாகரத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக கட்சி தெரிவித்துள்ளது.

## தொடருந்து ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போது 2023ஆம் ஆண்டுக்கான கணக்காய்வாளர்நாயகத்தின்அறிக்கைஆராயப் பட்டதுடன், இதில் புலப்பட்ட காரணங்களின் அடிப்படையில் அத்திணைக்களத்தை மீண்டும்குழு முன்னிலையில்அழைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இதற்காக முன்னாள் தொடருந்து பொதுமுகாமையாளர் மற்றும் அமைச்சின் முன்னாள் செயலாளர் ஆகியோரை அழைப்பதற்குத்தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், இந்த அதிகாரிகள் குழுவில் முன்னிலையாகி இருந்தனர்.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களின் கூட்டங்கள் போதியளவு நடத்தப்படாமை குறித்து குழு கவனம் செலுத்தியதுடன், 2021ஆம் ஆண்டு முதல் 2024ஆம்ஆண்டுவரை முகாமைத்துவக்குழு போதியளவுகூட்டப்படாமைகுறித்துமுன்னாள் அமைச்சின் செயலாளர் மற்றும் தொடருந்து பொது முகாமையாளர் ஆகியோரிடம் குழு கேள்வியெழுப்பியது.

கொரோனா தொற்றுக் காலத்தில் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தை நடத்த முடியாமல் போனதாக முன்னாள் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். இருந்தபோதும், 2024 ஆம் ஆண்டில் அதை முறைப்படுத்த திட்டமிடப்பட்டிருந்தாலும், அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டதால் திட்டமிடப்பட்ட கடைசி கூட்டத்தை நடத்த முடியாமல் போனதாக அவர்கள் தெரிவித்தனர்.

இந்தநிலைமைகாரணமாகநிறுவனத்தின் வினைத்திறன் குறைந்தமையால் 2022ஆம் ஆண்டு 64 தொடருந்து சேவைகளும், 2023ஆம் ஆண்டு 61 தொடருந்து சேவைகளும், 2024ஆம் ஆண்டு 46 தொடருந்து சேவைகளும் காலதாமதம் அடைந்திருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

இது தொடர்பில் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டதுடன், நாளாந்தம் தொடருந்து சேவைகள் காலதாமதம் அடைவது மற்றும் அவற்றைத் தடுப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்த அறிக்கையொன்றை அமைச்சுக்கு கையளிக்குமாறும் குழு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியது.

அத்துடன், தொடருந்து சேவைகள் இரத்துச் செய்யப்படுவதால் நாளாந்தம் ஏற்படுகின்ற இழப்புக்கள் குறித்து கணக்காய்வொன்றை மேற்கொள்ளுமாறும் குழு அறிவுறுத்தல் வழங்கியது.

அத்துடன், 2020 ஓகஸ்ட் மாதம் 28ஆம் திகதி அரசாங்க நிதி சுற்றறிக்கைக்கு அமைய கொள்முதல்திட்டத்திற்கு பிரதமகணக்காளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிலைமை இருக்கின்றபோதும், 2024 ஆண்டு கொள்முதல் திட்டத்திற்கு உரிய அனுமதி பெறப்படாமை குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. இது தொடர்பில் விசாரணை நடத்துமாறும் குழு வலியுறுத்தியது.

மேலும் தொடருந்துத்தின் ஊடாக சுண்ணாம்புக் கல் போக்குவரத்தை மேற்கொள்ள சியாம் சிட்டி சீமெந்து (லங்கா) நிறுவனத்திடமிருந்து 2024 டிசம்பர் 31ஆம் திகதிவரையில் அறவிடப்பட்டிருக்க வேண்டிய 2,187, 326 ரூபா நிலுவை வருமானத்தை அறவிடுவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது. இந்தத் திட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாகவும், அறவிடப்பட வேண்டிய தொகையை உரிய முறையில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

அதேநேரம், கடந்த மே மாதம் 22ஆம் திகதி கோபாகுழுவின்உறுப்பினர்கள்இரத்மலானை தொடருந்து பராமரிப்பு வேலைத்தளத்திற்கு கள விஜயம் மேற்கொண்டிருந்ததுடன், இந்த விஜயத்தின் போது கண்டறிந்த விடயங்கள் பற்றி குழுவுக்கு விளக்கமளிக்கப்பட்டது. அகற்றப்பட வேண்டிய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் வேலைத்தளத்தின் பெரும்பகுதியை ஆக்கிரமித்திருப்பதாகவும், சில இயந்திரங்கள் தேவையான சூழலில் நிறுவப்படவில்லையென்றும், சில உபகரணங்கள் தேவைக்கு அதிகமாகக் கொள்வனவு செய்யப்பட்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது என்றும் குழுவின் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

பதினொரு தொடருந்து இன்ஜின்கள் கொள்வனவு செய்யப்பட்டமை, அவற்றின் செலவு, பராமரிப்புச் செலவு தொடர்பான அறிக்கையைக் கையளிக்குமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. அத்துடன், கடந்த 5 வருட காலத்திற்குள் பெற்றுக்கொண்ட நிதி முன்னேற்றம் குறித்த விரிவான அறிக்கையை குழுவிற்கு வழங்குமாறும் பரிந்துரைக்கப்பட்டது.

இக்குழுக் கூட்டத்தில் கோபா குழுவின் உறுப்பினர்களான பிரதியமைச்சர் மேஜர் ஜெனரல் அருன ஜயசேகர, குழுவின் உறுப்பினர்களான ஜே.சி.அலவத்துவல, எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, சந்தன சூரியாராச்சி, டி.கே.ஜயசுந்தர, ருவன்திலக ஜயகொடி, சட்டத்தரணி துஷாரி ஜயசிங்ஹ, ஜனக சேனாரத்ன, மற்றும் மஞ்சுள சூரியாராச்சி ஆகியோரும், அரச அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

## நாணய ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டு உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொருளாதார மீட்சிக்காக ஆளும்தரப்பு எடுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் நீட்டிக்கப்பட்ட செயற்திட்டங்கள் சிறந்த முறையில் அமுல்படுத்தப்பட்டுள்ளன. பொருளாதார திட்டங்களை அடிக்கடி மாற்றியமைப்பது பிரச்சினைக்குரியதாக அமையும்.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக் கொண்ட சட்ட ரீதியிலான இணக்கப்பாட்டினால்ஒருசிலநிபந்தனைகளை கடுமையாக நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு காணப்படுகிறது. ஆகவே சிறந்த பொருளாதார மீட்சிக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட நீட்டிக்கப்பட்ட செயற்திட்டங்கள் முறையாக அமுல்படுத்தப்படும்.

மின்கட்டணம் உட்பட அரசாங்கத்தால் வழங்கப்படும் சேவைகள் மற்றும் இதர சலுகைகளுக்கான செலவுகளுக்குரிய வகையில் அவற்றுக்கான கட்டணங்கள் தீர்மானிக்கப்பட வேண்டும் என்பதை சர்வதேச நாணய நிதியம் அழுத்தமாக வலியுறுத்தியுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் மின்கட்டணம் 20 சதவீதத்தால் குறைக்கப்பட்டது. தற்போது வருடாந்த கட்டண திருத்தத்துக்கு அமைய மின்கட்டணம் 15 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. மின்கட்டணத்துடன் தொடர்புடையஇதரசேவைகளின்கட்டணங்கள் அதிகரிக்கப்படமாட்டாது என்றார்.

## மின்சார ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டதன் பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தவறான தரவுகள் மற்றும் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டு மின்கட்டணம் 15 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. மின்கட்டண அதிகரிப்புக்காக மின்சார சபை இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவில் முன்வைத்த தரவுகளில் பரஸ்பர வேறுபாடுகள் காணப்படுகின்றன.

எதிர்வரும் ஆறு மாதகாலத்துக்கு மழை வீழ்ச்சி கிடைக்காது என்று மின்சார சபை முன்வைத்துள்ள விடயம் முற்றிலும் தவறானது. மின்சார சபையின் மோசடி மற்றும் முறைகேடுகள் நாட்டு மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ளது. மின்சார சபையின் உண்மையபானநிதிநிலைமைவிவரங்களை எதிர்வரும் வாரம் ஆவணங்களுடன் வெளிப்படுத்துவேன்.

அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் மின்கட்டணத்தை மூன்றில் ஒரு பங்காக குறைப்பதாக குறிப்பிட்டார். ஆனால் தற்போது சர்வதேச நாணய நிதியத்தை திருப்திப்படுத்துவதற்காக மின்கட்டணம் 15 சதவீதத்தால் உயர்வடைந்துள்ளது.

சுயாதீன இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அதிகாரத்தை குறைத்து மின்கட்டணம் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தை நிதியமைச்சுக்கும், வலுசக்தி அமைச்சுக்கும் வழங்கும் வகையில் புதிய சட்டவரைவினை ஆளும்தரப்புத் தயாரித்துள்ளது. இந்த சட்ட வரைவு நிறைவேற்றப்பட்டால்மின்கட்டணம்தொடர்பில் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலையீடு இரத்துச் செய்யப்படும் என்றார்.

## கொள்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கியுள்ள ஆணைக்கு அமைவாகவே எதிர்க்கட்சிகளுடன் ஒன்றிணைந்துள்ளோம் என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற அதிகார சபைகளில் ஆட்சியமைப்பதற்காக எதிர்க்கட்சிகளுடன் பொது இணக்கப்பாட்டுடன் ஒன்றிணைந்துள்ளமை குறித்து இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தியை காட்டிலும் எதிர்க்கட்சிகள் பெரும்பாலான ஆசனங்களை கைப்பற்றி யுள்ளன. ஜனநாயக ரீதியில் மக்கள் வழங்கிய ஆணையை பலப்படுத்துவதற்காகவே எதிர்க்கட்சிகளுடன் பொது கொள்கையுடன் ஒன்றிணைந்துள்ளோம்.

கட்சியின் அடிப்படைக் கொள்கைகளுக்கு எதிராக பிரதான எதிர்க்கட்சிகளுடன் ஒன்றிணையவில்லை. எவ்வித கூட்டு ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்படவில்லை. நம்பிக்கை மற்றும் பொதுக் கொள்கை அடிப்படையின் மாத்திரமே ஒன்றிணைந் துள்ளன.

எதிர்க்கட்சிகளின் ஒருசில முறையற்ற செயற்பாடுகள் குறித்து கடந்த காலங்களில் முன்வைத்த குற்றச்சாட்டுக்கள் மற்றும் விமர்சனங்களில் எவ்வித மாற்றுக்கருத்தும் கிடையாது. தனித்த பெரும்பான்மையை உறுதிப்படுத்தாத உள்ளூராட்சிமன்ற அதிகாரசபைகளில் எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்து ஆட்சியமைப்போம்.

ஆளும்தரப்புக்கு எதிராக செயற்படும் சகல சக்திகளுடன் ஒன்றிணைவோம். நாட்டுக்கு பொருத்தமான அரசியல் மற்றும் பொதுக்கொள்கைகளை எதிர்க்கட்சிகள் பின்பற்றுமாயின் கொள்கை அடிப்படையில் இணக்கமாக செயற்படுவதற்கு தயாராகவே உள்ளோம் என்றார்.

## மின் கட்டண ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச நாணய நிதியத்தின் தொடர்பாடல் பிரிவின் பணிப்பாளர் ஜூலி கொஸாக், கடினமான மறுசீரமைப்புக்களின் ஊடாக எட்டப்பட்ட அடைவுகளை நிலையாகத் தக்கவைத்துக்கொள்வதற்கு விரிவாக்கப்பட்ட நிதி வசதிச் செயற்திட்டத்தை முழுமையான நடைமுறைப்படுத்தவேண்டும் என வலியுறுத்தினார்.

வோஷிங்டனில் நடைபெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் மாதாந்த செய்தியாளர் சந்திப்பின்போது 'இலங்கையைப்பொறுத்தமட்டில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் செயற்திட்டம் நிதியியல் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதை இலக்காகக்கொண்டிருப்பதனால் அதுவே இலங்கை நாடும் இறுதிச்செயற்திட்டம்' என அரசுத் தலைவர் அநுரகுமார திசநாயக்க தெரிவித்திருப்பது பற்றி நாணய நிதியத்தின் நிலைப்பாடு என்னவென்று ஊடகவியலாளர் ஒருவரால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே ஜூலி கொஸாக் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:

இலங்கைக்கான விரிவாக்கப்பட்ட நிதிவசதிச்செயற்திட்டம் குறித்த நான்காம் கட்ட மீளாய்வு தொடர்பில் 2025 ஏப்ரல் 25 ஆளும்தரப்புக்கும், சர்வதேச நாணய நிதிய அதிகாரிகளுக்கும் இடையில் உத்தியோகத்தர்மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டது.

இந்நிலையில் ஜூன் 11 ஆளும்தரப்பினால் அறிவிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் நாம் உன்னிப்பாக அவதானம் செலுத்தியிருக்கின்றோம். அந்த அறிவிப்பு 15 சதவீத மின்கட்டண உயர்வு மற்றும் மொத்த விநியோகக் கொடுக்கல், வாங்கல்களுக்கான கணக்கு வழிகாட்டல்களை வெளியிடல் என்பவற்றை உள்ளடக்கியிருக்கின்றது. அதன்படி ஏற்கனவே எட்டப்பட்ட உத்தியோகத்தர்மட்ட மீளாய்வு முடிவடைந்து, அதற்கு நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபை அனுமதி அளித்ததன் பின்னர் இலங்கைக்கு 334 மில்லியன் டொலர் நிதி வழங்கப்படும்.

அதேவேளை கடந்த பெப்ரவரி மாத இறுதியில் ஆட்சியியல் மறுசீரமைப்புக்கள் தொடர்பான புதுப்பிக்கப்பட்ட செயற்திட்டத்தை ஆளும்தரப்பு வெளியிட்டது. அச்செயற்திட்டத்தில் பொதுகொள்வனவுச்சட்டம், குற்றச்செயல்களின் வருமபடிகள் சட்டம் மற்றும் ஏற்கனவே நாணய நிதியத்தினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளுக்குஅமைவானநடவடிக்கைகள் என்பன உள்வாங்கப்பட்டிருந்தன.

அதேபோன்று விரிவாக்கப்பட்ட நிதிவசதிச் செயற்திட்டத்தின்ஆதரவுடன்இலங்கையினால் முன்னெடுக்கப்பட்டமறுசீரமைப்புநடவடிக்கைகள் வரவேற்கத்தக்க பெறுபேறுகளைத் தந்திருக்கின்றன. அதற்கமைய நாட்டின் பொருளாதாரம்குறிப்பிடத்தக்களவுவிரிவாக்கத்தைப் பதிவுசெய்திருக்கின்றது. பொருளாதாரத்தின் சகல துறைகளும் விரிவடைவதற்கான குறிகாட்டிகள் தென்படுகின்றன. பணவீக்கம் வீழ்ச்சியடைந்திருக்கின்றது. வெளிநாட்டுக்கையிருப்பு உயர்வடைந்திருக்கின்றது. வருமானத்திரட்சி மற்றும் நிதியியல் நிலை என்பன முன்னேற்றமடைந்திருக்கின்றன. இவ்வாறானதொருபின்னணியில்இந்தஅடைவுகளை நிலையாகத் தக்கவைத்துக்கொள்வதற்கு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிவசதிச்செயற்திட்டத்தை முழுமையான நடைமுறைப்படுத்தவேண்டும் என வலியுறுத்தினார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

காலைக்கதிர் Kalaikkathir







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.06.2025இல் வெளியிடப்பெற்றது